1994 ஏப்ரல் 8] [திரு. வி. தண்டாயுதபாணி]

நூற்பாலையை நடத்துவதை விட்டுவிட்டு, அதைத் தனியாரிடத்திலே கொடுத்துவிடுகிறோம் எனறு சொன்னால், இது என்ன நியாயம், எப்படி......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பர்கூரிலே ஆரம்பிக்க இருக்கிற கூட்டுறவு நூற்பாலை தனியாருக்குக் கொடுக்கப்படவில்லை. தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனத்தோடு சேர்ந்து கூட்டுத் துறையிலேதான் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடித்துவிடுங்கள்.

திரு. வி. தண்டாயுதபாணி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் கைத்தறி மையம் பற்றி நான் ஏற்கனவே சொல்லி விட்டேன். தமிழ்நாடு பூராவும் இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற, அது பனியன் உற்பத்தி செய்கின்ற திருப்பூராக இருந்தாலும் சரி, ஈரோடாக இருந்தாலும் சரி, திருச்செங்கோடாக இருந்தாலும் சரி, குடியாத்தமாக இருந்தாலும் சரி, குறிஞ்சிப்பாடியாக இருந்தாலும் சரி, பனியனாக இருந்தாலும், வேட்டி சேலையாக இருந்தாலும், எல்லோருமே இன்றைக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு ஒட்டுமொத்தமாகத் தீர்வு காண்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கமிட்டியைக் கூட்டி, அதை எப்படித் தீர்க்க முடியுமோ, அப்படித் தீர்த்து, நெசவாளர்களுடைய பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்கவேண்டும் என்று கேட்டுக் கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

6. அறிவிப்பு

உறுப்பினர் திரு. இரா. தாமரைக்கனி நிபந்தனையின் பேரில் விடுதலை செய்யப்பெற்றது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னை மத்திய சிறைக் கண்காணிப்பாளர் அவர்களிடமிருந்து "எழும்பூர் 13-வது பெருநகர நீதிமன்ற நடுவரால் நிபந்தனையுடன்கூடிய பிணையப் பத்திரத்தின்பேரில் திரு. தாமரைக்கனி, சட்டமன்ற உறுப்பினர், சிறையிலிருந்து 8-4-1994, இன்று பிற்பகல் 1.30 மணி அளவிலே விடுதலை செய்யப்பட்டார்" என்ற செய்தி வரப் பெற்றுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.